(63)

MANAGING DIRECTOR
10 NOV 2008
TWAD BOARD, CHENNAI - 600 005.

தமிழ்நாடு அரசு

## சுருக்கம்

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் – தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள –பூதலூர், தஞ்சாவூர் மற்றும் திருவையாறு ஊராட்சி ஒன்றியங்களைச் சேர்ந்த 229 ஊரகக் குடியிருப்புகள் மற்றும் சாஸ்த்ரா பல்கலைக்கழகத்திற்கு மொத்த ஒதுக்கீட்டுடன் கூடிய கூட்டுக் குடிநீர்த் திட்டம் – அதிகாரம் அளிக்கப்பெற்ற குழுவினால் பரிந்துரைக்கப்பட்டது–நிர்வாக ஒப்புதல் வழங்கப்படுகிறது.

---

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (குவ3) துறை

அரசாணை (நிலை) எண்:225 நாள் 10 .11.2008

திருவள்ளுவர் ஆண்டு ஐப்பசி 25

படிக்கப்பட்டது:

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய மேலாண்மை இயக்குநரின் கடிதம் எண் கோ. 181206/உபொ2/திமேபி/நாள் 23.9.2008.

**ஆணை:**

மேலே படிக்கப்பட்ட கடிதத்தில் தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள பூதலூர் ஊராட்சி ஒன்றியத்தில் 204 குடியிருப்புகள், தஞ்சாவூர் ஊராட்சி ஒன்றியத்தில் 7 குடியிருப்புகள், திருவையாறு ஊராட்சி ஒன்றியத்தில் 18 குடியிருப்புகள் ஆக மொத்தம் 229 ஊரகக் குடியிருப்புகளிலும் சராசரியாக தற்போது வழங்கப்பட்டுவரும் குடிநீர் அளவான நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு 10 லிட்டர் முதல் 25 லிட்டர் வரை கணக்கிலெடுத்து, மொத்தம் நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு 40 லிட்டர் கிடைக்கும் வகையிலும், சாஸ்த்ரா பல்கலைக் கழகத்திற்கு நாள் ஒன்றுக்கு 0.80 மில்லியன் லிட்டர் ஒதுக்கீட்டுடன், தேவைப்படும் குடிநீர் நாளொன்றுக்கு 4.20 மில்லியன் லிட்டர் என கணக்கிடப்பட்டு இக்குடிநீர் தேவையினை மணல்மேடு என்னும் குடியிருப்புக்கு அருகே கொள்ளிடம் ஆற்றை நீராதாரமாகக் கொண்டு தற்போது செயலாக்கம் செய்யப்படும் 706 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்காக அமைக்கப்பட்டுள்ள நீர் சேகரிப்பு கிணற்றிலிருந்து எடுக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது என்றும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய மேலாண்மை இயக்குநர் அரசுக்கு தெரிவித்துள்ளார்.

2. மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் சட்டமன்றத்தில், இத்திட்டத்தினை 2007–2008ஆம் ஆண்டில் ஆய்வுக்கு எடுத்துக் கொண்டு, 2008–2009ஆம் ஆண்டில் செயலாக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என அறிவித்துள்ளார். மேலும், இத்திட்டம் ரூ. 2847.00 இலட்சங்கள் அமைப்புச் செலவு எனவும், ரூ.39.60 இலட்சங்கள் ஆண்டு பராமரிப்புச் செலவு எனவும், தனி நபர் செலவு ரூ.2594/– எனவும், 1000 லிட்டருக்கான குடிநீர் செலவு ரூ.23.16 எனவும் கணக்கிடப்பட்டு, அரசின் நிர்வாக ஒப்புதல் பெறும் குறைந்த பட்சத் தேவைத் திட்டத்தின் கீழ் 229 ஊரகக் குடியிருப்புகளுக்கு ரூ.2344.00 இலட்சங்கள் மற்றும் சாஸ்த்ரா பல்கலைக்கழகத்திற்கான

வைப்புத்தொகை ரூ.503.00 இலட்சங்கள் எனவும் கணக்கிடப்பட்டு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் திட்டம் ஒன்றை வடிவமைத்துள்ளது.

3. 18.09.2008 அன்று நடைபெற்ற 19-வது அதிகாரம் அளிக்கப் பெற்ற குழுவின் முன் இத்திட்டத்திற்கு இசைவு வேண்டி வைக்கப்பட்டது. மேற்கண்ட குழு இத்திட்டத்திற்கு இசைவு அளித்து அரசின் நிர்வாக ஒப்புதல் பெறுவதற்கு பரிந்துரை செய்தது. இதனடிப்படையில் இத்திட்டத்திற்கு நிர்வாக ஒப்புதல் வழங்குமாறு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய மேலாண்மை இயக்குநர் அரசுக்கு செயற்குறிப்பு அனுப்பியுள்ளார்.

4. மேற்கண்ட தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய மேலாண்மை இயக்குநர் செயற்குறிப்பினை அரசு கவனமாக ஆய்வு செய்து தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள பூதலூர், தஞ்சாவூர் மற்றும் திருவையாறு ஊராட்சி ஒன்றியங்களைச் சேர்ந்த 229 ஊரகக் குடியிருப்புகள் மற்றும் சாஸ்த்ரா பல்கலைக்கழகத்திற்கு மொத்த ஒதுக்கீட்டுடன் கூடிய கூட்டுக் குடிநீர்த் திட்டம் ரூ. 2847.00 இலட்சங்கள் அமைப்புச் செலவு எனவும், ரூ.39.60 இலட்சங்கள் ஆண்டு பராமரிப்புச் செலவு எனவும், தனி நபர் செலவு ரூ.2594/- எனவும், 1000 லிட்டருக்கான குடிநீர் செலவு ரூ.23.16 எனவும் கணக்கிடப்பட்டு, இந்தக் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தினை குறைந்த பட்சத் தேவைத் திட்டத்தின் கீழ் 229 ஊரகக் குடியிருப்புகளுக்கு ரூ.2344.00 இலட்சங்கள் செலவில் 100 விழுக்காடு மான்யம் அடிப்படையில் செயல்படுத்த அரசு நிர்வாக ஒப்புதல் வழங்கி ஆணையிடுகிறது.

5. மேலும் சாஸ்த்ரா பல்கலைக்கழகத்திற்கான பங்குத்தொகை ரூ.503.00 இலட்சங்கள் திட்டப்பணிகளை துவங்குவதற்கு முன்னதாக ஒரே தவணையில் சாஸ்த்ரா பல்கலைக்கழகத்திடமிருந்து பெற வேண்டும் என்றும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய மேலாண்மை இயக்குநர் அறிவுறுத்தப்படுகிறார்.

//ஆளுநரின் ஆணைப்படி//

கே.தீனபந்து,

அரசு முதன்மை செயலாளர்.

பெறுநர்
மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், சென்னை-600 005.
ஊரக வளர்ச்சி இயக்குநர், சென்னை-600 015.
அரசு செயலாளர், உயர்கல்வித் துறை, சென்னை-9.
மாநில கணக்காயர், சென்னை – 18.
மாவட்ட ஆட்சியர், தஞ்சாவூர் மாவட்டம்.
சம்மந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்புகள் (ஊரக வளர்ச்சி இயக்குநர் மூலமாக)
நகல்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சரின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை -600 009.
மாண்புமிகு நிதி அமைச்சரின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை -600 009.
முதலமைச்சர் அலுவலகம், சென்னை-9.
நிதி(ந.நி(ம)கு.வ) துறை, சென்னை-9.
பொது (நூலகம்) துறை, சென்னை -600 009.
நநி (ம)குவ, (அநமு2) குவ1 / குவ.2/ குவ4/ வசெ துறை, சென்னை – 9.
இகோ/உ.நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.